ஓம் ஸ்ரீ நைமிசாரண்ய சேத்ரம் மாகத்மியம்



ஆங்கிலத்தில் தொகுத்து எழுதியவர்

காலம் சென்ற ஸ்ரீ கைலாஷ் பதி பூஜாரி

மகான் வியாஸர் காடி

நைமிசாரண்யம்

தமிழில்

கவிஞர் மா. முருககுமாரன்

வெளியிடுபவர்

ஸ்ரீ யோகாச்சார்யா சுவாமிகள் (இமயமலை)

2014-15

Price : 10 Rupees

பொருளடக்கம்

 31/2

மங்கள சரணம்

முன்னொரு காலத்தில் பார்வதிதேவி கைலாய மலையில் அமர்ந்திருந்த கடவுள் சிவனிடம் நைமிசாரண்யத்தின் மகாத்மியம் பற்றி தெளிவாக எடுத்துக்கூறும்படி மிகவும் ஆவலாக கேட்டுக்கொண்டார். அதன்பொருட்டு சிவன் நைமிசாரண்ய சேத்திரத்தின் மகாத்மியம் பற்றி கூறுவதை கவனமாக கேட்கும்படியும் மேலும் அதைக் கூர்ந்து கேட்கும்போது பக்தியானது பார்வதியின் உள்ளங்கைகளில் அடங்கிவிடும் என்றும் கூறினார்.

பிர்மம மனோமய சக்ர & ஆதிசக்தி லலிதா தேவிபாத சமர்ப்பணம்

முதன் முதலில் இந்த இடத்தைச் சுற்றிலும் அடர்ந்த வனமும் அங்கே மூன்று சிறப்பான விஷயங்களும் இருந்தன அவை 1) காட்டாறு (நதி 2) கோமதி வனம் 3) ஆதி சக்தி லலிதா தேவி.

பழங்காலத்தில் 88000 ரிஷிகள் நான்முகனான பிரம்மதேவனை அணுகினார்கள். பிரம்மனிடம் தாங்கள் தவம் மேற்கொள்ள புனிதம் வாய்ந்த இடங்களை கூறும்படி பணிவுடன் கேட்டனர். உடனே பிரம்மதேவன் ஒரு சக்கரத்தை உருவாக்கினார். மேலும் அதை எறிந்து அந்த சக்கரம் எந்த இடத்தில் சென்று விழுகிறதோ அந்த இடமே மிகவும் பவித்திரமானதும், பக்தியோடு தவம் செய்ய ஏற்ற இடமாகும் என்றார். மேலும் அவ்விடத்தை நைமிசாரண்யம் என்று அழைக்கப்பட வேண்டும் என்றார். பிரம்மன் எறிந்த சக்கரம் 14 லோகங்களையும் சுற்றியபிறகு பூமியின் மையப்பகுதியான அந்த வனப்பகுதியை அடைந்தது. பூமியின் அந்த மையப்பகுதியை அடைந்ததும் அந்த

சக்கரம் நின்றது. சக்கரத்தை தொடர்ந்து சென்ற ரிஷிகளும் இந்த இடத்தில் நின்றனர். இவ்விடம் தவம், யக்ஞம், நற்செயல்கள் புரிய மிகவும் ஏற்ற இடம் என்பதை அறிந்து கொண்டனர்.

நமது மூதாதையர்கள் நமக்கு கூறியுள்ளபடி இந்த சக்கரம் நாமி என்கின்ற சப்தத்துடன் பூமியை துளைத்து 7-ல் 6.5% பாதாளங்களை துளைத்துக்கொண்டு இருந்தபோது ரிஷிகள் மிகுந்த பயத்துடன் பயந்து அலறினார்கள். அதனால் பிரம்மனை நோக்கி வணங்கி அதை தடுத்திட வேண்டினர். ரிஷிகளின் இந்நிலையை கண்ட பிரம்மா ஆதிசக்தியை தடுத்து நிறுத்தும்படி வேண்டினார். அந்த கணத்திலேயே லலிதா தேவி அந்த சக்கரத்தின் சுழற்சியை தடுத்து நிறுத்தினார். அதனால் லலிதா தேவி போற்றி வணங்கப்பட்டு அவ்விடமும் நைமிசாரண்யம் என்று பெயரிட்டு வழங்கப்பட்டது.

ரிஷிகளின் போற்றுதலில் மகிழ்ந்த லலிதா தேவி இவ்வாறு கூறினார். இவ்விடத்தில் தினந்தோறும் எவரொருவர் சிவனை நோக்கி தொடர்ந்து பதினைந்து தினங்களுக்கு பூஜை செய்கிறார்களோ அவர்களின் வாழ்வில் அனைத்து ஆசைகளையும் முழுமையாக அடைய முடியும்.

108 பரிக்கிரமங்கள் அதன் பலன்கள்

எந்த பக்தன் ஒருவன் ஒவ்வொரு நவராத்திரி தினங்களிலும், 108 மணிகளை கொண்ட துளசி மாலையை கொண்டு, துர்க்கையின் நாமத்தை ஜெபிக்கிறானோ, அவனின் அனைத்து ஆசைகளையும், துர்க்கை அன்னை பூர்த்தி செய்வாள். அதுமட்டுமின்றி ஏழைகள் செல்வம் பெறுவர். குழந்தையற்றவர் குழந்தைபேறு பெறுவர். மாணவர்

அறிவுச் செல்வம் பெறுவர் மற்றும் மணமாகாதோருக்கு விரைவில் திருமண பாக்கியம் கிட்டும்.

சக்கர தீர்த்தத்தில் நீராடுவதால் ஏற்படும் பலன்கள்

எவரொருவர் நைமிசாரண்ய சக்ரதீர்த்தத்தில் புனித நீராடுகிறார்களோ அவர்கள் தங்களின் எல்லாவிதமான பிரச்சனைகளிலிருந்தும் விடுபடுவார்கள். மேலும் அவர்கள் இந்த உலகவாழ்வை விடுகின்ற பொழுது நேராக சொர்க்கத்தை அடைகிறார்கள். சிவபெருமான் பார்வதியிடம் இவ்வாறு கூறுகிறார், சூரியகிரகணத்தின் போது குருசேத்திரத்தில் நீராடுபவர்களுக்கு என்ன பலன்கிடைக்குமோ அதே பலன் இங்கே சக்கர தீர்த்தத்தில் நீராடுபவர்களுக்கு கிடைக்கும்.

ஒருவன் ஒரு இலட்சம் பசுவை தானமாக மற்ற இடங்களில் கொடுப்பது, நைமிசாரண்யத்தில் ஒரே ஒரு பசுவை தானமாக தருவதற்கு சமமாகும்.

கயா என்ற பெயர் கொண்ட அரக்கன் சத்திய யுகத்தில் மிகவும் கடுமையான தவம் புரிந்தான். அவனின் தவத்தின் கடுமையை உணர்ந்த விஷ்ணு பகவான் அவன் முன்பாக தோன்றி அவனிடத்தில் என்ன வரம் வேண்டுமென்று வினவினார். இதனைக் கேட்ட அரக்கன் கயா கடும்கோவம் கொண்டான். மேலும் விஷ்ணுவை நோக்கி உனக்கு என்ன வரம் வேண்டும் அதை என்னிடம் கேள் என்றான். அதன் பிறகு அந்த அரக்கனின் மரணம் தன் கைகளிலேயே ஏற்படும் என்று விஷ்ணு கூறினார். அதை அந்த அரக்கனும் ஏற்றுக்கொண்டான். விஷ்ணு தனது சக்ராயுதத்தால் அரக்கனின் உடலை மூன்று துண்டு வெட்டி அந்த மூன்று துண்டுகளும் மூன்று இடங்களில் எறிந்தார்.

அவ்வை கயாவிலுள்ள சரண்கயா, நைமிசாரண்யத்திலுள்ள நபிகயா மற்றும் பத்ரி நாராயண ஸ்தலத்தில் உள்ள கபில் கயா போன்றவை ஆகும். ஒருவன் தனது மூதாதையர்களின் ஆத்மா சாந்திபெற அவன் இந்த மூன்று இடங்களில் பிண்டம் மற்றும் தர்ப்பணம் செய்தால் நலம். மேலும் வஸ்திரம், தானியங்கள், சுட்ட மண்கலயம், தேங்காய், பழம் மற்றும் பசு போன்றவைகளை தானமாக பிராமணனுக்கு கொடுத்தால் நலம். இவைகளை நாம் செய்வதன் மூலமாக நமது பித்ருக்கள் சொர்க்கத்தினால் சுகமாக இருப்பார்கள்.

சுயவம்பவா மனு சத்ருபா தவம்

முன்பு ஒரு காலத்தில் பிரம்மன் பிரம்மத்தை அறிய தியானித்தான். அந்த கணத்தில் பிரம்மனின் உடல் இரண்டு துண்டுகளாக பிரிந்து விட்டது. அதன் ஒரு பகுதி கா என்று அழைக்கப்பட்டது. அதுவே பிரம்மனின் பெயர். அதன்பொருட்டே உடல் கயா என்று அழைக்கப்படுகிறது. பிரம்மனின் மற்றொரு பகுதியில் மகாராஜா மனு மற்றும் தேவி சத்ருபா இருவரும் தோன்றினார்கள். அப்போதிலிருந்து ஆண் பெண் சேர்க்கையின் மூலமாக உலகில் மனிதர்கள் தோன்ற தொடங்கினர் பின்பு முழுமையாக மனிதனின் பிறப்பிற்கு பிறகு மனு மற்றும் சத்ருபன் இருவரும் பிரம்மாவை தங்கள் கைகளால் தொழுது தாங்கள் எதன் மூலமாக நேராக சொர்க்கம் செல்ல முடியும்? அதற்கான விதிமுறைகளை கூறும்படியும் வேண்டி கேட்டுக் கொண்டனர். பிறகு பிரம்மன் இவ்வாறு கூறினார். உங்களை ஆசீர்வாதிக்கிறேன். மேலும் உங்களை பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் விஷ்ணுவை முழுமையாக பக்தியுடன் வழிபாடு செய்யுங்கள் பிறகு குழந்தை பிறப்பில் ஈடுபடுங்கள் என்றார். பிறகு மனு உலகில் மனித பிறப்புக்காக கூடினார்கள்.

வேண்டுமென்றார். பகவான் அவர் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, எனக்கு இணையான ஒருவனை படைக்க முடியாததால் நானே உனக்கு குழந்தையாக பிறப்பேன், என்றார். பிறகு மகாராணி சத்ருபாவை நோக்கி அவருக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். அவரும் வெளிப்படையாக தனது கணவர் கேட்டுப்பெற்ற வரமும் ஆசீர்வாதமும் தனக்கு போதும் என்று கூறினார். நீங்கள் அயோத்தி அரசனின் மகாராணி என்ற நிலைபெறும்போது நான் உங்கள் வயிற்றில் மகனாக பிறப்பேன் என்றார். மேலும் இன்றும் கூட குழந்தையற்றவர்கள் இங்கே வந்து தானம் செய்வதை காணலாம்.

ஸ்ரீ வேதவியாசரின் மகாத்மியங்கள்

ஸ்ரீ வேதவியாசர் துவாபர யுகத்தில், தாய் சத்யவதிக்கும், தந்தை மகரிஷி பராசருக்கும்., ஒரு குரு பௌர்ணமி அன்று மகனாக பிறந்தார். வேத வியாசர் வேதங்களை வகைப்படுத்துவதற்கு பிறந்ததாக பொதுவாக கூறப்படுகிறது.

ஒரு யுகத்தின் இறுதியில் பிரம்ம தேவன் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் வெள்ளத்தினால் ஒரு மிகப் பெரிய் பிரளயம் ஏற்பட்டது. அப்பொழுது அனைத்து லோகங்களும் நீரில் மூழ்கிய சமயம், பிரம்மனின் வாயிலிருந்து வெளிப்பட்ட வேதங்களை ஒரு அரசன் எடுத்துச் சென்றுவிட்டான். அவன் பெயர் ஹயக்ரீவன் பகவான் அவனை வென்று வேதங்களை மீட்டெடுத்தார். அவற்றை வேத வியாசர் நான்காக பிரித்தார். பின் 6 சாஸ்திரங்களையும், 18 புராணங்களுடன், மேலும் 17 புராணங்களையும் எழுதிய வியாசர், திருப்தியடையாமல்,

மேலும் என்ன எழுதலாம்? என தீவிர சிந்தனையில் இருந்தபோது அவர் முன் நாரத முனி தோன்றினார். அவர் வியாசரிடம், ஏன் நீங்கள் கவலையுடன் காணப்படுகிறீர்கள் வியாசரே? என வினவினார். வியாசர் அதற்கு நான் 17 புராணங்களையும் எழுதியுள்ளேன், இருப்பினும் என் மனம் அமைதியின்றி தவிக்கிறது, என பதிலளித்தார். அதற்கு நாரதர் அவரை ஸ்ரீ கிருஷ்ணரை பற்றி எழுதும்படி கூறினார். அவ்வாறு எழுதினால் வியாசரின் மனம் அமைதிபெறும் என்றும் அறிவுறுத்தினார். மேற்கூறிய உரையாடலை ஸ்லோகங்களாக வெளிப்படுத்தினார்.

இன்றும் கிருஷ்ண பக்தர்கள் வேதவியாசரை மலர்களாலும், வாசனை தூபங்களினாலும் வழிபட்ட பிறகே ராமாயணம் மற்றும் மகாபாரதத்தை பாராயணம் செய்ய துவங்குகின்றனர். இவ்வாறாக சத்ய நாராயண விரத கதையை காதால் கேட்பவர்கள் கூட தங்களின் ஆசைகள் பூர்த்தியடைந்து மகிழ்கிறார்கள்.

மகரிஷி சுத் ஜானக் சம்வாத்

முன்பு ஒரு காலத்தில் பகவான் விஷ்ணு ஷவுனகாதயை அழைத்து உலகின் உயர்ந்த தெய்வத்தை மகிழ்விக்க ஒரு யக்ஞத்தை செய்யவும், அதை புனிதமான நைமிசாரண்யத்தில் செய்யும்படியும் வேண்டினார். அதன்பொருட்டு யக்ஞம் தொடங்கப்பட்டு முடிவடைய பலவருடங்கள் ஆகின. ஒரு நாள் அதிகாலை நேரம், காலைக்கடன்களை முடித்து ஸ்ரீசட் அவர்கள் மேடையிலே அமர்ந்து இருந்தார். அவரை வணங்கி வந்த பிறகு இக் கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது. நீங்கள் நீண்டநாட்களாக வேதவியாசா ஆஸ்ரமத்தில் தங்கி இருந்தீர்கள். அங்கே நீங்கள் அனைத்து புராணங்கள் மற்றும் வேதங்களை

எல்லா படைப்புகளின் மூலக் காரணம். நான் உங்கள் முன்பாக தலைவணங்கி இருப்பதாலே அமைதியடைகிறேன். பிரம்மனும், சிவனும் வழிபட்ட அதே பாத கமலங்களை நான் இப்பொழுது தொடுவதில் பெரும் மகிழ்வுகொள்கிறேன். பகவானின் கமல மலர் பாதங்களை சரணடைபவர்கள் இந்த உலக துன்பங்களில் விடுபட்டு அடுத்த சொர்கத்திற்கு அமைதியாக எவ்வித இடையூறுமின்றி அனுப்பப்படுகிறார்கள்.

நைமிசாரண்யத்தின் 84 பரிக்ரமங்கள்

நைமிசாரண்யம், என்ற இந்த புனித ஸ்தலத்தில் 84 பரிகிரமங்க பூஜைகள் நடைபெறுகின்றன. அவை 11 முக்கிய இடங்களில் நடைபெறும். 1) கேராயுனா 2) ஹராரியா 3) நாகவகோத்தூர் 4) கிரதார் பூர் உம்ராரி 5) சோக்கின் கோபல்பூர் 6) டியோகஒனா 7) மதுரா 8) ஜாரிஹாவன் 9) நைமிசாரண்யம், 10) கோல்ன்ஹா ப்ரீத்தி 11) மிஸ்ரித் தீர்த்த பரிகிரம்ம நைமிசாரண்யத்தில் தொடங்கி மிஸரித்தில் முடிகிறது.

நைசாரண்ய தீர்த்த மகாத்மியம்

ஸ்ரீ தாத்ஹிச் மிஸ்ரித்தில் நீராடி தனது தவத்தை துவக்கினார். பிறகு தனது உடல் முழுவதும் உப்பை பூசிக்கொண்டு தெளித்தார். மாடுகளுக்கு எலும்பையும் மாமிசத்தையும வழங்கினார். முன்பொரு காலம் நைமிசாரண்யத்தில் பிரத்தாசூர் என்றும் அசுரன் வாழ்ந்து வந்தான். அவன் தவம்புரியும் ரிஷிகள் மீது

சிறுநீரை கழித்து பெரும் துன்பத்தை விளைவித்தான். பகவான் அவன் மீது இதனால் கோபம் கொண்டார். ஸ்ரீ தாத்ஹரிச் இருப்பிடம் நைமிசாரண்யத்திலிருந்து 6 கிலோமீட்டர் ஆகும். இவ்விடத்தில் புகழ்பெற்ற சிவன் மற்றும் பார்வதியின் அழகிய சிலை ரூபங்கள் உள்ளன.

நைமிசாரண்யத்தில் உள்ள 8 வைகுண்டங்கள்

1) முக்தி நாராயணன்

2) வெங்கடாஜலபதி

3) சாலி கிராமம்

4) ஸ்ரீ ரங்கம்

5) தோத்ததிரி

6) புஷ்கரணி

7) பத்ரிநாராயணன்

8) நைமிசாரண்யம்

மேற்கண்ட இந்த வைகுண்டங்கள் யாவும் பூலோகத்தில் அமைந்துள்ளவை. இதில் எட்டாவது வைகுண்டம் புகழ்மிக்க நைமிசாரண்யம் ஆகும். இந்த நைமிசாரண்ய தீர்த்தம் ஹரவுராவில் இருந்து டேராடூன் வரையிலும் அலகாபாத்திலிருந்து சகரன்பூர்வரையிலும் பாலமாமூலிருந்து சீதாபூர் வரையிலும் அமைந்துள்ளது.

நைமிசாரண்ய தீர்த்தம் பத்து மைல் பரப்பளவில் விரிந்து பரந்துள்ளது. அதன் அற்புத அழகை சரஸ்வதி

தேவியால் கூட முழுமையாக விளக்க முடியாது. இது பிரம்மதேவனின் உறைவிடம் என்றே கூறப்படுகிறது. மேலும் இந்திரன் ஒவ்வொரு நாளும் அனைத்து தேவ தேவதைகளை இங்கே அழைத்து மகிரிஷி ஸ்ரீ தாத்ஹிச் வலம் வந்து வணங்கிட வேண்டிக்கொள்கிறார். இது 84 பரிகிரம பூஜைகளை உள்ளடக்கியது. இந்த பரிகிரம பூஜை செய்ய முடியாதவர்கள் சாவா கோஷ் பரிகிரமத்தை செய்தாலே அந்த 84 பரிகிரமத்தை செய்ததற்கு சமமாகும். கங்கையை சுற்றி 8மைல்கள் நடந்தாலே அது அஸ்வமேத யாகம் நடத்தியதற்கு ஒப்பாகும். காசியிலே ஒருவர் நான்கு மைல் நடந்தாலே அது அஸ்வமேத யாகத்திற்கு சமமாகும். குருஷேத்திரத்தில் 2 மைல்கள் நடத்தாலே அது அஸ்வமேத யாகம் செய்வது போன்றது. ஆனால் நமது நைமிசாரண்யத்தில் நாம் நடக்க எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் நாம் அஸ்வமேத யாகம் செய்வதற்கு சமமாகும்.

ஜகத் பந்து ஆசிரமம் திரீத்தி பால மந்திர் இல்லம்

ஹதிரவன் என்னும் அசுரன் ராமன் மற்றும் லக்ஷ்மணனையும் பாட்டப்புரி என்னும் இடத்திற்கு கடவுளுக்கு பலியிடுவதற்காக கடத்தி கொண்டு வந்தான். ஹனுமன் அங்கு விரைந்து சென்று அந்த அசுர ஹதிரவனை கொன்று ராமண்னையும் லக்ஷ்மனணையும் தன் தோளில் சுமந்து காற்றைபோல் விரைந்து கோமதி நதிக்கரையை அடைந்தார். அந்த இடமே ஹனுமன் காட் என்று அழைக்கப்பட்டு உலகின் அனைத்து மக்களாலும் வணங்கப்படுகிறது.

பஞ்ச பாண்டவ தவம்

நைமிசாரண்யத்தில் பஞ்ச பாண்டவர்கள் பனிரெண்டு ஆண்டுகள் தவம்புரிந்து பிறகு அமாவசையில் நீராட இருந்தனர். ஆனால் அந்த பனிரெண்டு ஆண்டுகளில் அமாவாசை நிகழவே இல்லை. அதனால் அவர்கள் வெறுப்படைந்து கலியுகத்தில் ஒவ்வொரு வருடமும் அமாவாசை இடம்பெற வேண்டுமென்று அன்றைய தினத்தில் அனைத்து மக்களும் நீராடி அதன் பலனை பெற்றிட வேண்டி கேட்டுக்கொண்டனர்.

நைமிசாரண்ய மகாத்மியத்தை தங்கள் மனதிற்குள்ளும் பிறருக்கும் சொல்லி வந்தால் அவர்களில் ஆசைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு அவர்களின் இறப்பிற்கு பிறகு அமைதியான முறையில் அவர்கள் சொர்கத்தை அடைவார்கள்.

ஓம் தத் சத்

ஆங்கிலத்தில் வெளியிட்டவர்
ஸ்ரீ சந்தன் தீக்ஷிதர்
வியாஸ் காடி - நைமிசாரண்யம்

தமிழில்
கவிஞர் - மா. முருககுமரன்
ஒசூர்,
தமிழ்நாடு
கைபேசி : 9865208999

விருப்பமுள்ளவர்கள் தாராளமாக நிதி உதவி செய்யலாம்

முதல் முறையாக தமிழில் ஸ்ரீ நைமிசாரண்யா மகாத்மிய சேத்திரம் பற்றி புத்தகம் வெளிவந்துள்ளது. இதில் தவறுகள் இருப்பின் அருள்கூர்ந்து மன்னிப்பீர்.

பொருள் மற்றும் பண உதவி செய்ய நினைப்பவர்கள் வியாஸ் காடிக்கு அனுப்பலாம். முகவரி கீழே உள்ளது.

முகவரி

ரிஷபவ் தேவ் தீக்சிதர் & சன்சய் தீக்சிதர்

இடம் : வியாஸ் காடி
தபால் : நைமிசாரண்யம்
மாவட்டம் : சீதாபூர்
கைபேசி : 9935935623, 9935936450
9919748203

SHRIMED BHAGWAT RAMAYAN PATH SATSANG & YOGA ANUSHTHAN

Please use the above menti and Address for Correspondence

Printed - Rathore Printing Press, Sitapur
Mob.: 8853274077